# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2496/28 - 2026 ජූලි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.07.09

2496/28 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 99

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**
**(திருத்தியமைக்கப்பட்டது)**

12(2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 12(2)இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது,கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அத்தகைய பொருட்களின் உற்பத்தியாளர், பொதியிடுபவர், விநியோகத்தர், போக்குவரத்தாளர், களஞ்சியப்படுத்துபவர் அல்லது வியாபாரி எவரும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் SLS தரச்சான்று குறியீட்டை கொண்டிருந்தாலன்றி அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யவோ, பொதியிடவோ, விநியோகிக்கவோ, போக்குவரத்து செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு வழங்கவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ முடியாது என பணிப்புரை விடுக்கின்றது.

மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் அத்தகைய பொருட்களின் இறக்குமதியாளர், பொதியிடுபவர், விநியோகத்தர், போக்குவரத்தாளர், களஞ்சியப்படுத்துபவர் அல்லது வியாபாரி எவரும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் பிரிவு 20 இன் ஏற்பாடுகளின் படி இறக்குமதி (தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு) ஒழுங்குமுறை 2006 இன் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் இயக்கப்படும் இறக்குமதி ஆய்வுத் திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்பட்டு விற்பனைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யவோ, பொதியிடவோ, விநியோகிக்கவோ போக்குவரத்து செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ,விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு வழங்கவோ,மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ முடியாது எனவும் பணிப்புரை விடுக்கின்றது.


1A - PG 7799- 53 (2026/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(I) ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய சுகாதார துவாய்களுக்கான இலங்கை தரநிலை விவரக்குறிப்பு - Sri Lanka Standard Specification for Single Use Sanitary Towels (SLS 1732)

(II) ஒருமுறை பயன்படுத்தக்கூடிய மிகவும் மெல்லிய/மெல்லிய சுகாதார துவாய்களுக்கான இலங்கை தரநிலை விவரக்குறிப்பு - Sri Lanka Standard Specification for Single-Use Ultra-Thin/Slim Sanitary Towels (SLS 1748)

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் மேற்கூறிய தரநிலைகளில் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களுக்கும் இந்த பணிப்புரை செல்லுபடியாகும்.

இப் பணிப்புரை, 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**எஸ்.எம். டீ. சூரியகுமார,**
தவிசாளர் (பதில் கடமை).

கொழும்பு ,
2026, யூலை 09.

EOG 07 - 0146